*செய்தி வெளியீடு எண்: 99* *நாள்: 15.11.2021*

**திரு. பக்வன் பிர்சா முண்டா அவர்களின் பிறந்த நாளைப் 'பழங்குடியினர் பெருமை தினமாக' அறிவித்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ் நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் நன்றி தெரிவித்தார்.**

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பழங்குடியின மக்களின் பங்கு அளப்பரியது. அவர்கள் நாடு முழுவதும் தத்தம் பகுதிகளில் ஆங்கிலேயர்களை முழு வலிமையுடன் எதிர்த்துப் போராடினர். மேலும், அத்தகைய போராட்டங்களின்போது, அவர்களில் எண்ணற்றோர் ஆற்றொணாத் துயரங்களை அடைந்ததுடன், ஆங்கிலேயர் கைகளால் மாண்டும் போயினர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் மாபெரும் தலைவராக பக்வன் பிர்சா முண்டா விளங்கினார். அவர் துணிவுமிக்கவராகவும் மக்கள் போற்றும் தலைவராகவும் திகழ்ந்தார். தன் இளம் வயதிலேயே ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு அவர் வீரமரணம் அடைந்தார்.

திரு. பக்வன் பிர்சா முண்டா அவர்கள் நம் நாட்டு விடுதலைக்காக, வீரத்துடன் போரிட்டு, அளப்பரிய பங்காற்றிமையைப் போற்றும் வகையில், அன்னாரின் பிறந்த நாளான நவம்பர் திங்கள் 15-ஆம் நாளை 'பழங்குடியினரின் பெருமை தினமாக' அறிவித்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோதி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ் நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் நன்றி தெரிவித்தார். இந்நன்னாளில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள் பொதுவாக இந்தியப் பழங்குடியின மக்களுக்கும், குறிப்பாகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த பழங்குடியின மக்களுக்கும் அவர்கள் செய்த எண்ணற்ற தியாகங்களுக்கு நன்றி தெரிவித்தார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்திய மறுமலர்ச்சியில் பழங்குடியின மக்களும் ஏனையோருக்கு இணையான பங்குதாரர்களே என்பதை மெய்ப்பிக்கும் வகையில், பழங்குடியின மக்களின் அனைத்து வகையிலுமான வளர்ச்சிக்காக, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோதி அவர்கள் பூண்டுள்ள உறுதிமொழியை அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

---

**ஆளுநர் மாளிகை, சென்னை – 22** **ஒம்/-**
**நாள்: 15.11.2021** **கூடுதல் இயக்குநர்**

**Press Release No: 99** **Date: 15.11.2021**

## HON'BLE GOVERNOR OF TAMIL NADU,THIRU.R.N.RAVI THANKED THE HON'BLE PRIME MINISTER THIRU.NARENDRA MODI FOR DECLARING BIRTHDAY OF BHAGWAN BIRSA MUNDA, AS THE 'JANJATIYA GAURAV DIVAS'

Janjatis (Tribes) of India have made extraordinary contributions to the India's freedom movement. They resisted at their respective locations throughout the country, the British rule with their full might and while doing so a large number suffered untold miseries and even martyrdom at the hands of the British. Bhagwan Birsa Munda was a legendary hero of India's freedom movement. He was a brave and charismatic leader. He died young fighting the British.

Hon'ble Governor Thiru.R.N.Ravi thanked the Hon'ble Prime Minister Thiru.Narendra Modi for declaring 15th November, the birthday of Bhagwan Birsa Munda, as the 'Janjatiya Gaurav Divas', a day to commemorate the exemplary valor and extraordinary contribution of our Janjatis to our National Freedom.On this auspicious occasion, Hon'ble Governor Thiru.R.N.Ravi expressed gratitude to the Janjatis of India in general and those in Tamil Nadu in particular for their sacrifices. He reiterated the resolution of Hon'ble Prime Minister Thiru. Narendra Modi for the all-round development of the Janjatis, so that they are equal partners in the historic resurgence of India.

---

Raj Bhavan, Chennai – 22 Sd/-

Date : 15.11.2021 Addl.Director (PR)